# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 16.06.2025**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி,, பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 10385/B/2022**

திரு. S. ஏழுமலை -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்,
செயற்பொறியாளர்,
நீர்வளத் துறை,
ஆரணியாறு வடிநிலக் கோட்டம்,
சேப்பாக்கம்,
சென்னை-600 005.

பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர்,
தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு
வாரியம்,
எண்.5, காமராஜர் சாலை,
சேப்பாக்கம்,
சென்னை-05.

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 13.02.2025 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது:-

> ***மனுதாரருடைய 13.12.2021 தேதியிட்ட மனுவின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு முதல் கேள்விக்கான பதில் வழங்கப்பட்டுள்ளது என்றும், மீதம் உள்ள 2,3,4 மற்றும் 5 ஆகிய இனத்திற்கான தகவல்கள் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் பதிலறிக்கை கடித எண்.07/கோ.27/கூவம்/2025, நாள்.06.02.2025 மூலம் கேட்கப்பட்டுள்ளதாகவும் பொதுத் தகவல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதனால், பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், காமராஜர் சாலை, சென்னை அவர்கள் ஆணையத்திற்கு 27.02.2025 அன்று நேரில் ஆஜராகி மனுதாரர் கோரிய 2,3,4 மற்றும் 5 ஆகிய இனங்களுக்கான அனைத்து தகவல்களையும் வழங்குமாறு உத்தரவிடப்படுகிறது.***

மேற்படி உத்தரவின்படி, பொதுத் தகவல் அலுவலர் / தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், எண்.5, காமராஜர் சாலை, சேப்பாக்கம், சென்னை-05 அவர்கள் 27.02.2025 அன்று ஆணையத்தின்முன்பு நேரில் ஆஜராகி மனுதாரர் கோரிய 2,3,4 மற்றும் 5 ஆகிய இனங்களுக்கான தகவல்களை வழங்கவில்லை என்பதை இவ்வாணையம் பதிவு செய்து, பொது தகவல் அலுவலர் மீது காரணம் கேட்கும் குறிப்பாணை (Show Cause Notice) கோரப்படுகின்றது.

மேற்படி இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பாணையின்மீது பொது தகவல் அலுவலர் உரிய காலத்திற்குள் விளக்கம் சமர்ப்பிக்க தவறும்பட்சத்தில், பொது தகவல் அலுவலரிடமிருந்து விளக்கங்கள் ஏதும் பெறப்படவில்லை என தீர்மானித்து தக்க நடவடிக்கை பரிந்துரை செய்யப்படுமென உத்தரவிடப்படுகின்றது.

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**இணைப்பு: காரணம் கேட்கும் குறிப்பாணை (Show Cause Notice)**

**வழக்கு எண். SA 10385/B/2022**
பொதுத் தகவல் அலுவலர்,
தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்,
எண்.5, காமராஜர் சாலை,
சேப்பாக்கம்,
சென்னை-05.

**மேல்முறையீட்டாளர்**
திரு. S. ஏழுமலை,
எண்.278, A-பிளாக்,
காந்தி நகர், பல்லவன் சாலை,
சென்னை - 2.
செல்.9789916711.

Copy to: File GP PC